வரையறுத்த சிலோன் பெற்றோலியம் ஸ்ரோரேச் ரேமினல்ஸ் கம்பனி - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பியுள்ள அபிப்பிராயம்

வரையறுத்த சிலோன் பெற்றோலியம் ஸ்ரோரேச் ரேமினல்ஸ் கம்பனியின் (''கம்பனி'') 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கை தகவல்களை உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இந்தக் கணக்காய்வினை மேற்கொள்வதற்கு பொதுத்தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் உதவியை நான் பெற்றிருந்தேன்.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர கம்பனியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களில் என்னுடைய அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்பட்டுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல்.

பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனி செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனி ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கம்பனி வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான கணக்காய்வு அவதானிப்புகள்

1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	குறிதித நியமங்களுக்கான குறிப்புமைகளுடன் இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	LKAS 16 இன்- ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் 51 ஆம் பந்தியின் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்களை தவிர முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட சொத்துக்களின் கிரயம் மற்றும் பயன்படுத்தப்பட்ட சொத்துக்களின் முற்கொண்டுவரும் பெறுமதி முறையே ரூபா 10,477 மில்லியன் மற்றும் ரூபா 10,603 மில்லியன்	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 11,126 மில்லியன் பெறுமதியான முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட கற்பனைச் சொத்துக்கள் 32,335 விடயங்களை மேவுகின்றது. அதில் ஒவ்வொன்றும் ரூபா 50,000 இற்கு தறைவாக இருந்த 27,448 விடயங்களை அதிக நன்மைகளை	கம்பனியானது இலங்கை கணக்கீட்டு நியமங்களின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும்.

	முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் 26,267 விடயங்கள் மற்றும் செய்யப்பட்ட ஆதனம், பொறி மறறும் உபகரணங்களின் மீளாய்வு செய்யப்படாமல் கம்பனியால் இன்னமும் பயன்படுத்தப்படுகின்ற 8 வகுதியான சொத்து விடயங்கள் என்பன நியம்மதின் 79(ஆ) ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. கம்பனியானது 2003 இல் கம்பனி தொடங்கியதிலிருந்து காணி மற்றும் கட்டிடங்களை தவிர அதன் சொத்துக்களை மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகவே, காயி மற்றும் கட்டிடங்கள் தவிர்ந்த நடைமுறையல்லாச் சொத்துக்களின் நியாய பெறுமதி மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	தருகின்ற உயர்ந்த நிர்வாக கிரயங்கள காரணமாக மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. பதிலாக முகாமைத்தவம் உயர்ந்த பெறுமதியுடைய சொத்தக்களை மாத்திரம் மீள்மத்பீடு செய்வதற்கு செயற்படுத்தியது. கற்பனைச் சொத்துக்கள் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மொத்தம் 4,376 விடயங்களை கொண்ட ரூபா 47,926 மில்லியன் மொத்தமான சாதகமான தேறிய புத்தகப் பெறுமதி ஆக இருந்தது. 2024 இல் CPSTL ஆனது SLAS 16இன் வழியில் அரசாங்க மதிப்பாய்வு திணைககள அறிக்கையின் அடிப்படையில் காணி மற்றும் கட்டிடங்களின் மீள்மதிப்பீடு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. கொலன்னாவ மற்றும் முத்தராஜவெலவில் மொத்த எரிபொருள் சேமிப்பு தாங்கியின் மீள்மதிப்பீடு பூர்த்தியாக்கப்பட்டு 2025 ஏப்ரல் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படும். இருக்கின்ற எண்ணெய் தாங்கிகளின் மீள்மதிப்பீடு செயற்பாட்டில் உள்ளதுடன் ஆண்டிற்குள் பூர்த்தியாக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.	
(ஆ)	LKAS 16 இன் - ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் 36 ஆம் பந்தியின் பிரகாரம் ‘‘ஆதனம், பொறி மறறும் உபகரயங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்குமாயின் சொத்துக்களிற்க சொந்தமாக இருந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணஙகின் முழு வகுப்பும் முள்மதிப்பீடு செய்யப்பட வேண்டும்’’ எவ்வாறாயினும் கம்பனியானது மொத்த கட்டிடங்களின் கரயத்தில் ரூபா 246,985,014 அல்லது 13 சதவீதம் கம்பனியால் உடமையாக்கப்பட்ட 371 கட்டிடங்களில் 81 கட்டிடங்கள் மீள்மதிப்பீடு செய்வதற்கு தவறியிருந்தது. மேலும், நிலையான சொத்துப் பதிவேட்டுடன் ஒப்பிடும் போது மீள் மதிப்பீட்டு பட்டியலிலுள்ள 147 மீள்மதிப்பீடு செய்யப்பட்ட கட்டிடங்களை மெய்மையாய்வு	புறாமலை, விபுலசேன மாவத்தையில் அமைந்திருந்த கட்டிடஙங்கள், காலி டிப்போவில் சிறிய கட்டிடங்கள, மற்றும் ஏ மற்றும் பீ தரம்) கொட்கலவிலுள்ள உத்தியோகத்தர் விடுதிகள் என்பன தவிர CPSTL இற்கு சொந்தமான இறையிலாதன கட்டிடத்தின் மீள்மதிப்பீடு 2024-12-31 இல் உள்ளவாறு மீள்மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டது. இது 2024-12-31 இல் உள்ளவாறு அரசாங்க மதிப்பீட்டு திணைககத்திடமிருந்து மதிப்பிடுடு அறிக்கை பெறப்படாமையால் நிதிக் கூற்றில் . குறிப்புக்களாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. தற்போது புறாமலை, விபுலசேன மாவத்தையில் அமைந்திருந்த கரிணி மற்றும் கட்டிடஙங்களின்	கம்பனியானது LKAS 16 இன் வேண்டுகையுடன் இணங்கியயொழுக வேண்டும்.

செய்வதற்கு இயலாதிருந்தது.	மீள்மதிப்பீடு முழுமையாக பூர்த்தியாக்கப்பட்டு 2025 மே மாதத்தில் நிதிக்கூற்றுக்களில் நாளது வரையாக்கப்படும். மிகுதியாக இருக்கின்ற ஆதனங்கள் தற்போது மீள்மதிப்பீட்டு நடைமுறை செயற்பாட்டில் உள்ளதுடன் 2025 நிதிக்கூற்றில் ஒன்றிணைக்கப்படும். மேற்குறிப்பிட்டவற்றில் ஒரு பகுத (காலிக்கானது தவிர) சகல மொத்த டிப்பொக்களும் 5 ஆண்டுகள் புதுப்பிக்ககூடிய நிபந்தனையில் CGR இடமிருந்து பெறப்பட்ட காணிகள் குத்தகையாதன காணியாக உள்ளது. ஆகவே, அந்த டிப்பொக்களில் அமைந்திருந்த கட்டிடங்கள் கம்பனி வடிவமைக்கும் போது நிலையான சொத்துப் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை.	

1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	பிராந்திய அடிப்படையில் பேணப்படுகின்ற எரிபொருள் சேமிப்பு வசதிகளிற்காக நீண்டகால வாடகை அடிபபடையில் 09 புகையிரத இருப்புகள் பயன்படுத்தியதுடன் உடன்பட்டவாறு 2013 வரை வாடகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. பொது முகாமையாளர் - புகையிரத திணைக்களத்தின் 2024 செப்தெம்பர் 12 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தவேண்டிய நீண்டகால வாடகை நிலுவை ரூபா 111,108,874 ஆக உள்ளது. கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்ககளில் செலுத்தவேண்டிய வாடகையான இனங்காணப்பட்ட தொகை ரூபா 99,876,792 ஆக உள்ளது. இதன்படி, 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் ரூபா 11,232,082 செலுத்த வேண்டிய வாடகையின் குறை ஏற்பாடு இனங்காணப்பட்டது. மேலும், அந்த குத்தகை உடன்படிக்கை 2013 இல் காலாவதியாகியிருந்தது என	2024-12-31- இல் உள்ளவாறான நிதிக்கூற்றுகளில் ரூபா 99,876,792 செலுத்த வேண்டிய குத்தகை வாடகைகளில் பொறுபபக்களில் அடிப்படையானது. பணிப்பாளர் சபை 2014.01.01 முதல் 2023.12.31 வரையான 10 (10) ஆண்டு காலத்திற்காக 09 LBDs இற்காக குத்தகை வாடகையை குறைப்பதற்காக பேரம்பேசிய பின்னர் இலங்கை புகையரத திணைக்களத்திற்கு ரூபா 86,358,792 + VAT (*2025.06.11 ஆந் திகதிய CPSTL சபை தீர்மான இல. 13/258)* செலுத்துவதற்கு அனுமதி வழங்கியிருந்தது. அந்த குத்தகை வாடகை கொடுப்பனவுகள் காலக்கிரமத்தில் செய்யப்படும்.	குத்தகை உடன்படிக்கைகள் நாளதுவரையாக்கப்பட வேண்டியதுடன் இதன்படி ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

அவதானிக்கப்பட்டது. புகையிரத திணைக்களம் மதிப்பீட்டு திணைக்களத்திடமிருந்து வாடகை பெறுமதி பெறுவதன் மூலம் குத்தகை உடன்படிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பொதிலும் கம்பனியானது வாடகைப் பெறுமதியுடன் உடன்படாமையால் குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிரக்கவில்லை.

1.6 பெறவெண்டிய கணக்குகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	கம்பனியின் 2024 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திடமிருந்து (CPC) பெறவேண்டிய தொகை ரூபா . 8,100,420,819 ஆக இருந்தது. எவ்வாறாயினும், CPC ஆல் உறுதிப்படுத்திய மீதி ரூபா 6,753,780,207 ஆக இருந்நது. இதன்படி, அந்த இரண்டு மீதிகளிற்கும் இடையில் ரூபா 1,346,640,612 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. கம்பனியானது வித்தியாசங்களை இணக்கம் செய்வதற்கு இணக்கக்கூற்று தயாரித்திருந்ததுடன் அந்த வித்தியாசங்களுடன் உடன்படுவதற்கு CPC உடன் கறைந்துரையாடல்கள் இடம்பெற்றது. இதன்படி கம்பனியானது CPC உடன் ரூபா 24,000,000 ஆன தேறிய வித்தியாசங்கள் பரஸ்பரம் உடன்பட்டது. எவ்வாறாயினும் வித்தியாசங்களிற்குரிய ரூபா 777,413,155 ஆன தொகையன மொத்த கொடுக்கல் வாங்கல்கள் நிதிப் பதிவேட்டில் பதியப்படும். கம்பனியானது 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதிந்திருக்கவில்லை. மேலும் இணக்கக்கூற்றிலுள்ள வித்தியாசம் ரூபா 1,322,640,612 பரஸ்பரம் உடன்பட்டிருக்கவில்லை. மேலும் 5 ஆண்டுகளிற்கு மேலாகவும் 14 ஆண்டுகளிற்கு குறையாமலும் நிலுவையாக இருக்கின்ற பெறவேண்டிய மீதி ரூபா 719,393,334 அவதானிக்கப்பட்டது.	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு CPC இற்கும் CPSTL இற்கும் இடையில் மொத்த தகராறுடைய மீதி ரூபா 1,346,640,612 ஆக இருந்தது. இது உடன்படாமை மற்றும் முகாமைத்துவத்தின் முன்னனுமதியின்மை போன்றன காரணமாக இணக்கம் செய்யப்படாதிருந்த கொடுக்கல் வாங்கலின் பெறுமதி ரூபா 777,413,155 ஐ உள்ளடக்ககின்றது. CPC ஆனது அந்த கட்டணங்களை அறவிடுவதற்கு வினைத்திறனான அளவீடுகளை எடுத்திருக்காததுடன் CPC பெறவேண்டியவை ஐந்து ஆண்டுகளிற்கு மேலான பெறவேண்டியவையாக ரூபா 719,393,334 மொத்த தொகையில் 2025 இல் CPSTL ஆனது ரூபா 71,742,825 தகராறுடைய நீண்டகாலம் பெற வேண்டியவை சபை அனுமதியுடன் பதிவழிக்கப்பட்டது.	கம்பனியானது ஒன்றிணைந்த மீதிகள் இணக்கம் செய்வதற்கும் நிலுவை மற்றும் உரிய தரப்பினரிடமிருந்து உரியகால தீர்ப்பனவு அல்லது பெறுவனவு இணக்கம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ஆ)	2024 ஆம் ஆண்டிற்கான கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் லங்கா இந்தியன் ஒயில் கம்பனியிடமிரந்து (LIOC) பெறவேண்டிய தொகை ரூபா 1,163,874,058 ஆக இருந்தது. எவ்வாறாயினும் LIOC ஆல் உறுதிப்படுத்தப்பட்ட மீதி ரூபா 356,002,161 ஆக இருந்தது. இதன்படி இந்த இரண்டு மீதிகளிற்கு இடையில் ரூபா 807,871,897 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. இன்படி கம்பனியால் வித்தியாசங்களை இனங்காண்பதற்கு இணக்கக்கூற்று தயாரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ரூபா 637,032,487 தொகையான LIOC ஆல் காட்டுதல் செய்யப்பட்ட போக்குவரத்து கட்டணங்கள் சாட்டுதல் செய்யாமையால் எழுந்த வித்தியாசம் LIOC உடன் பரஸ்பரம் உடன்பாடு காணப்பட்டது. ஆகவே இந்த வருமானத்தின் அறவீட்டுத் தன்மை ஐயத்திற்கிடமாக இருந்தது. மேலும் ரூபா 2,495,897 தொகையான நீண்டகாலம் நிலுவையாக இருக்கின்ற பெறவேண்டிய மீதிகள் 8 ஆண்டுகளிற்கு மேலாக தீர்க்கப்படாதிருந்தது.	LIOC ஆனது 2025 ஏப்ரல் 23 இல் CUF உடன்படிக்கை கைசாத்திட்ட பின்னர் ரூபா 637,032,487 தொகையான BTR மொத்த போக்குவரத்து கட்டணங்கள் மீதான மொத்த நிலுவை கொடுப்பனவுகளை விடுவிப்பதற்கு உடன்பட்டது. அதன் பின்னர் CPSTL ஆனது 2025 மே மாதத்தின் போது இடமிருந்து ரூபா 96,022,375 கொடுபபனவுகள் அறவிடப்பட்டதுடன் காலக் கிரமத்தல் மிகுதி கொடுப்பனவுகள் பெறப்படும். .. CPSTL செயற்பாட்டு திணைக்ளம் 2016 ஆம் ஆண்டின் போது CPSTL இடமிருந்து ரூபா 2,495,897 தொகையான தாமதக் கட்டணங்களின் வேண்டுகைகாக LIOC உடன் ஆரம்பத்தில் உடன்பட்டிருக்கவில்லை. ஆகவே, நிகழத்தக்க பொறுப்பாக இந்த பொறுப்பு வகை கணக்கேடுகளில் அத்தகைய பொறுப்புக்களிற்காக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகவே LIOC ஆனது CPSTL இடமிருந்து அந்த கட்டணங்களை அறவிடுவதற்கு எந்தவொரு படிமுறைகளையும் எடுத்திருக்கவில்லை. CPSTL ஆனது LIOC இடமிருந்து 2025 ஆம் ஆண்டின் பொது அவர்களுடைய கணக்கேடுகளிலிருந்து அந்த பதிவுகளை அகற்றுவதற்கு வேண்டியிருந்தது.	கம்பனியானது ஒன்றிணைந்த மீதிகள் இணக்கம் செய்வதற்கும் நிலுவை மற்றும் உரிய தரப்பினரிடமிருந்து உரியகால தீர்ப்பனவு அல்லது பெறுவனவு ணக்கம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை .

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு	இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையால்	மீளாய்வாண்டினை மேவி செயல் நடவடிக்கை திட்டத்துடன் சேர்த்து இறுதியாக்கப்பட்ட உபாய திட்டம் இலங்கை பெற்றோலிய	2025.04.02 இல் நடைபெற்ற 256 ஆவது சபைக் கூட்டம் மற்றும் 2025.05.08 இல் அனுமதிக்கப்பட்ட குறிப்புகள் என்பவற்றால்	கம்பனியானது கூட்டு ஆளுகை மீதான வழிகட்டலை பின்பற்றுவதற்கு வேண்டப்பட்டது.

வழங்கப்பட்ட அரச உடமையாக்கப்பட்ட முயற்சிகளிற்காக கூட்டு ஆளுகை மீதான வழிகாட்டலின் 2.3 ஆம் பிரிவு	கூட்டுத்தாபனம் (தாய் கம்பனி) மற்றும் திறைசேரிக்கு கம்பனியால் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை.	2025-2029 காலப் பகுதிக்கான உபாய திட்டம் மற்றும் செயல் நடவடிக்கை திட்டம் என்பவற்றிற்கு சபை அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அனுமதிக்கப்பட்ட உபாயத் திட்டம் மற்றும் செயல் நடவடிக்கை திட்டம் வரிசை அமைச்சு மற்றும் CPC என்பவற்றிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

2. நிதி மீளாய்வு

2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டின் வரிக்கு முன்னரான செயற்பாட்டு விளைவு ரூபா 4,998 மில்லியன் தொகையான இலாபமானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 314 மில்லியன் தொகையாகும். ஆகவே, நிதி விளைவுகளில் ரூபா 5,312 மில்லியன் தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. ரூபா 4,385 மில்லியனால் ரேமினல் வருமானம், ரூபா 4,070 மில்லியனால் போக்குவரத்து கட்டணங்கள், ரூபா 26 மில்லியனால் REPO முதலீடு மீதான வட்டி என்பவற்றின் அதிகரிப்பே இந்த முன்னேற்றத்திற்கான பிரதான காரணமாக இருந்தன.

2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

அதிகரிப்பு அல்லது வீழ்ச்சி சதவீதங்களுடன் முன்னைய நான்கு (04) ஆண்டுகளுடன் ஒப்பீடு செய்யப்பட்டு மீளாய்வாண்டின் பிரதான வருமானம் மற்றும் செலவினங்களின் பகுப்பாய்வு பின்வருமாறு உள்ளன

ஆண்டுகள் **பிரதான விடயங்கள்**		**2024**	**2023**	**2022**	**2021**	**2020**
வருமானம்	**ரூபா.மில்**	**18,899**	**10,150**	**9,433**	**14,276**	**12,568**
முரண்	ரூபா.மில்	8,749	717	(4,843)	1,708	(2,772)
முரணின் சதவீதம்	%	86.2	7.6	(33.9)	13.6	(18.1)
நேரடிக் கிரயம்	**ரூபா.மில்**	**(9,562)**	**(6,846)**	**(6,806)**	**(8,369)**	**(7,634)**
முரண்	ரூபா.மில்	2,716	40	(1,563)	735	(946)
முரணின் சதவீதம்	%	39.7	0.58	(18.7)	9.6	(11)
ஏனைய செயற்பாட்டு வருமானம்	**ரூபா.மில்**	**1,015**	**1,180**	**1,309**	**706**	**573**
முரண்	ரூபா.மில்	(165)	(129)	603	133	(279)

முரணின் சதவீதம்	%	(14.0)	(9.8)	85.4	23.2	(32.75)
நிர்வாகச் செலவினம்	**ரூபா.மில்**	**(5,688)**	**(5,098)**	**(4,925)**	**(5,061)**	**(4,463)**
முரண்	ரூபா.மில்	589	173	(136)	(598)	(474)
முரணின் சதவீதம்	%	11.6	3.5	(2.6)	13.4	(9.6)
நிதி வருமானம்	**ரூபா.மில்**	**334**	**307**	**285**	**202**	**309**
முரண்	ரூபா.மில்	27	22	83	(107)	(14)
முரணின் சதவீதம்	%	8.8	7.7	41	(34.6)	(4.3)
ஆண்டிறகாக இலாபம்	**ரூபா.மில்**	**4,998**	**(315)**	**(704)**	**1,578**	**2,138**
முரண்	ரூபா.மில்	5,313	389	(2,282)	(560)	(151)
முரணின் சதவீதம்	%	1,686.7	55.2	(144.6)	(26.0)	(6.6)

2.3 வீதப் பகுப்பாய்வு

முன்னைய நான்கு (04) ஆண்டுகளுடன் ஒப்பிடப்பட்டு பிரதான வீதங்கள் பின்வருமாறு உள்ளன.

ஆண்டு **வீதம்**		**2024**	**2023**	**2022**	**2021**	**2020**
இலாபத்தன்மை வீதங்கள்						
மொத்த இலாப வீதம் (GP)	%	49.40	32.55	27.9	41.38	43.73
செயற்பாட்டு இலாப வீதம்	%	24.68	(6.12)	(10.49)	9.64	13.48
தேறிய இலாபம் / (நட்டம்) வீதம்	%	26.45	(3.10)	(7.46)	11.06	15.76
திரவ வீதங்கள்						
நடைமுறை வீதம்	தடவை	5.53	6.62	5.36	5.7	8.66
விரைவு வீதம்	தடவை	5.28	6.23	5.06	5.46	8.24
முதலீட்டு வீதம்						
சொத்தின் மீதான வருவாய் (ROA)	%	8.16	(0.96)	(2.09)	4.74	6.67
பங்கொன்றிற்கான உழைப்புகள்	(ரூபா)	4.51	0.05	(1.41)	1.56	2.64
பொருத்துதல் வீதம்						

உரிமை மூலதனத்தின் மீதான கடன் வீதம்	தடவை	0.31	0.22	0.23	0.21	0.20

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ திறமையீனங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
அ)	அரச உடமையாக்கபட்ட முயற்சிகளிற்காக செயற்பாட்டு கைநூலின் 6.7 ஆம் பந்தியின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் வருடாந்த அடிப்படையல் மெய்மையாய்வு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும் கம்பனியானது 2003 ஆம் ஆண்டிலிருந்து கம்பனி மீள்கட்டமைப்புக்குமான வழிகள், மொத்த எரிபொருள் சேமிப்பு பின்னர் நிலையான சொத்துக்களை பௌதக ரீதியாக மெய்மையாய்வு செய்திருக்கவில்லை. ஆகவே, மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் பதியப்பட்ட ரூபா 18,597,745,238 பெறுமதியான பொருயளவான சொத்துக்ளின் நிலையான சொத்து வகுதிகளின் உள்ளதன்மை மற்றும் பெறுமதியை மெய்மையாய்வு செய்வதற்கு இயலாதிருந்தது.	ரூபா 58.1 பில்லியன் மொத்த சொத்து அடிப்படையின் 95.1 சதவீதத்தினை விட அதிகமாக காணி, கட்டிடங்கள், குழாய் வழிகள், மொத்த எரிபொருள் சேகரிப்பு தாங்கிகள், பம்புகள் மற்றும் உயர்த்திகள் போன்ற அசையான நிலையான சொத்துக்களை கொண்டுள்ளதுடள் மோட்டார் வாகனத் தொகுதி காப்புறுதி நோக்கத்திற்காக மோட்டார் வாகனங்களின் ஓட்டோ மொபைல் அசோசியனால் நடாத்தப்பட்ட 100 சதவீத பௌதீக மெய்மையாய்வாகும். ரூபா 58.1 பிலிலியன் மொத்த சொத்து அடிப்படையில் 4.9 சதவீதம் மாத்திரமே தளபாடம், பொருத்திகள், உகபரணங்களின் சாதனங்கள் மற்றும் கணனிகள் போன்ற அசையக்கூடிய சொத்துக்களைக் கொண்டுள்ளது. சகல அசையாத சொத்துக்களும் நிலையான சொத்துக்களின் சட்ட உரிமையாண்மை, பௌதீக உள்ளதன்மை என்பன கணக்கீட்டு நாக்கத்திற்காக மீள் மதிப்பீட்டு அறிக்கை வழங்கும் போது அரசாங்க மதிப்பீட்டு திணைக்களத்தால் பௌதீக மெய்மையாய்வு செய்யப்பட்டது. மேலும், கொலன்னாவ மற்றும் முத்திராஜவெல ஒயில் ரேமினலில் அசையும் நிலையான சொத்துக்களின் பௌதீக மெய்மையாய்வு நிதி மற்றும் கணக்காய்வுப் பிரிவு மேற்கொண்டதுடன் அந்த அறிக்கை கணக்காய்வு மீளாய்விற்காக உரிய	அரச உடமையாக்கபட்ட முயற்சிகளிற்காக செயற்பாட்டு கைநூலின் வேண்டுகையுடன் இணங்கியொழுக வேண்டும்.

		திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டன.	
(ஆ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டங்கள் தொடரபான ரூபா 23,137,341 ஆன நடைபெறும் வேலைகள் ஆண்டின் பொதான இலாபத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது. இந்த பதிவழிப்பு மீதான பரீட்சிப்பின போது ரூபா 16,979,325 தொகையான விலைப் பட்டியல் மற்றும் ரூபா 8,225,012 தொகையான பொறியியலாளர் சான்றிதழ் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மேற்குறித்த பதிவழிப்பிற்கான சபை அனுமதி கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை. ஆகவே, சொல்லப்பட்ட பதிவழிப்பின் அதிகாரம், உண்மைத் தன்மை மற்றும் பெறுமதியை மெய்மையாய்வு செய்வதற்கு முடியாதிருந்தது.	ந.வே இல. 610000000032 செயற்திட்டம் : முத்திராஜவெலவில் உட்கட்டமைப்பு அபிவிருத்தி வசதிகள் **தொகை: ரூபா 6,142,500** இந்த தொகை ஆலோசனையாளர் கட்டணத்தை மாதத்திரம் உள்ளடக்குவதுடன் செயற்திட்டம் இடை நிறுத்தப்பட்டது. ந.வே இல : 630000000025 செயற்திட்டம் : கொனன்னாவவில் 30 ஆம் இலக்க தாங்கியை மீளமைத்தல் **தொகை: ரூபா. 354,830** இந்தக் கொடுப்பனவு 30 ஆம் இலக்க தாங்கியிளை சுற்றிய பகுதியில் மண் பரிசோதனைக்காக செய்யப்பட்து. ந.வே இல : 710000000016 செயற்திட்டம் : தோண்டுதல் மற்றும் எண்ணெய் மீட்டெடுப்பை தரமுயர்த்தல் **தொகை: ரூபா. 10,874,719** இந்த கொடுப்பனவு கொலன்னாவ பொருத்தலில் தாங்கியிலுள்ள கருத்தியல் வடிவமைப்பு தொடர்பில் ஆலேசனை சேவைகளிறகாக செய்யப்பட்டது. இந்த வேலை பூர்த்தியாக்கப் பட்டதுடன் பாதீட்டு அனுமதி இந்த செயற்திட்டத்திற்காக விசேடமாக வழங்கப்பட்டது. ந.வே இல : 610000000060 செயற்திட்டம : Security Improvement at KKS **தொகை: ரூபா 3,924,135** இந்த செயற்திட்டம் புதிதாக குத்தகைக்கு பெற்ற காணிக்கு இருக்கின்ற தொடர் வேலியை மாற்றுவதில் ஈடுபட்டது.	நடைமுறை வேலையின் பதிவழிப்பு அரச உடமையாக்கபட்ட முயற்சிகளிற்காக செயற்பாட்டு கைநூலின் 6.9 ஆம் பந்தியின் வேண்டுகையுடன் இணங்கியொழுக வேண்டும்.

		ந.வே இல : 710000000019 செயற்திட்டம் : முத்திராஜவெலவில் உபபாகங்களின் திருத்தம் மற்றும் சேவை - SO 12880 **தொகை: ரூபா 1,825,641** உபபாகங்களின் திருத்தம் மற்றும் பராமரிப்பிற்காக மூன்றாம் தரப்பு பரிசோனைக் கட்டணங்களிற்காக செய்யப்பட்ட கொடுப்பனவு.	
(இ)	கொலன்னாவ ரேமினலில் 6 எரிபொருள் தாங்கிகளின் (15,000m³ இல் 3 தாங்கிகள், 7,000m³ இல் 2 தாங்கிகள் மற்றும் 5,000m³ இல் 1 தாங்கி) நிர்மாணம் மற்றும் செயற்பாடுகளிற்கான ஒப்பந்தம் 2019 செப்தெம்பர் 18 ஆந் திகதிய 19/2129/119/078/TBR ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் கீழ் ஐ.அ.டொலர் 12,680,000 இற்காக M/s JPMA-GTPL சங்கத்திற்கு வழங்கப்பட்டது. ஒப்பந்தகாரரின் நலிவான செயலாறறல் காரணமாக கம்பனி மற்றும் ஒப்பந்தகாரர் அந்த 6 தாங்கிகளின் நிர்மாணத்திற்கான செயற்திட்டத்தின் பூர்த்தியாக்கல் தொடர்பில் 2025 மார்ச் 10 இல் நடுவர் தீர்ப்பு உடன்படிக்கை கைச்சாத்திட்டது. 2025 ஏப்ரல் 02 ஆந் திகதிய 25/0466/825/028 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் ஊடாக நடுவர் தீர்ப்பு உடன்படிக்கையின் நிபந்தனைகளை அமுலாக்குவதற்கான அனுமதி பெறப்பட்டதுடன் அந்த ஒபபந்த உடன்படிக்கையின் மீதான இரத்தினால் ஒப்பந்தகாரர்ல் நிர்மாண வேலைகளிலருந்து வெளியேறியிருந்தார். 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியினுடைய கணக்குகளின் பிரகாரம் அவரிற்கு செலுத்தப்பட்ட ரூபா 435,389,607 ஆன முற்பணம் நடைமுறை வேலையின் கீழ் பதியப்பட்டதுடன் பின்னர் முற்பணம் 2025 ஏப்ரல்	2019 ஆம் ஆண்டின் பொது M/s JPMA-GTPL சங்கத்திற்கு ஆறு தாய்ங்கிகள் செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட அமைச்சரவை அனுமதி (2019 செப்தெம்பர் 18 ஆந் திகதிய 19/2129/119/078/TBR ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம்) இந்த செயற்திட்டம் 2022 சனவரியில் CPSTL பணிப்பாளர்˙ சபையால நிறுத்தப்பட்டது. CPSTL ஆனது 2024 யூனில் ரூபா 44.0 மில்லியன் கிரயத்தில் முன்னைய ஒப்பந்தகாரரால் செய்யப்பட்ட பகுதியளவு பூர்த்தியாக்கிள வேலைகள செய்வதற்காக “கொலன்னாவவில் பரிந்துரைக்கப்பட்ட ஆறு களஞ்சிய தாங்கிகள் பொருத்தலிற்கான அத்திவார வேலைகள் பாதுகாப்பு” இற்காக வரையறுத்த M/s JN நிர்மாண (தனியார்) கம்பனிக்கு இன்னொரு ஒப்பந்தம் வழங்கப்பட்டது. 2025 மார்ச் 10 இல் M/s JPMA-GTPL சங்கத்தத்துடன் இணக்கமாக தீர்ப்பனவு உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டதுடன் 2025 ஏப்ரல் 02 இல் 25/0466/825/028 ஆம் இலக்க அமைச்சரவை அனுமதி பெறப்பட்டது. கொலன்னாவவில் பரிந்துரைக்கப்பட்ட ஆறு களஞ்சிய தாங்கிகள்	2025 ஏப்ரல் 02 ஆந் திகதிய 25/0466/825/028 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்ட பரிந்துரைகள் அமுலாக்கப்பட வேண்டும்.

	02 இல் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. அந்த நேரத்தில் தாங்கிகளின் அத்திவார வேலைகள் மாத்திரம் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. கணக்காய்வு திகதியில் உள்ளவாறு மிகுதியாக இருக்கின்ற தாங்கிகளின் வேலைகளை பூர்த்தியாக்குவதற்கு வேண்டப்பட்ட புதிய ஒப்பந்தகாரர் இன்னமும் தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை	பொருத்தலிற்கான அத்திவார வேலைகள் பாதுகாப்பு பூர்த்தியான பின்னர் இந்த கிரயம் 2025 ஏப்ரல் மாதமளவில் கணக்கெடுகளில் மூலதனமாக்கப்பட்டிருந்தது. ஆறு தாங்கிகள் செயற்திட்டத்தின் மிகுதி வேலைகளின் நிர்மாணத்திற்காக 2024 ஆம் ஆண்டு ICB கேள்விகள் கொரப்பட்டதுடன் 2025 யூலை மாதத்தில் கேள்வி வழங்கப்படும்.	
(ஈ)	கம்பனியானது யூரோ 44,911 கிரயத்தில் விரல் அடையாளங்களுடன் 02 மூரிங் கவ்சேர்ஸ் இறக்குமதி செய்திருந்ததுடன் 2022 மற்றும 2023 இல் கம்பனிக்கு கையளித்திருந்தது. மேலும் கம்பனியினுடைய ஒயில் வசதிப் பிரிவின் களஞ்சியத்திற்கு வெளியில் பாதுகாப்பற்ற தேக்கிவைத்தல் காரணமாக ரூபா 13 மில்லியன் பெறுமதியான ஒரு மூரிங் கவ்சேர்ஸ் பயன்பாட்டின் பின்னால் சேதமடைந்திருந்ததென அவதானிக்கப்பட்டது. ஆகவே, கமபனியானது களஞ்சியப்படுத்த வேண்டிய கவ்சேர்ஸ் கீழ் நிபந்தனைகளை மீளாய்வு செய்வதை கருத்திற் கொண்டிருக்காததுடன் களஞ்சியப்படுத்தலின் பொதான சேதங்களை தடுப்பதற்கு போதிய அளவீடுகள் எடுத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.. மேலும் கம்பனியானது இந்த பிரிவினை மேவி ஒன்லைன் பொருளிருப்பு கண்காணிப்பு முறைமை பொருத்தியிருக்கவில்லை என அவதானிககப்பட்டது. திறந்த வெளியில் உயர்ந்த பெறுமதியுடைய சொத்துக்கள் மற்றும் அலுவலக செயற்பாடுகள தொடர்பான சொத்துககளை களஞ்சியப்படுத்துவதற்கு பயன் படுத்தப்பட்டிருந்தது. 2025 மே 20 இல் உள்ளவாறு ரூபா 13 மில்லியன் தொகையான சேதங்களை அறவீடு	விரலடையாளங்களுடனான இரண்டு மூரிங் கவ்சேர்ஸ் உயர்ந்த பெறுமதி மற்றும் நீண்டகாலம் பயன்படுத்தமை (10 அண்டுகளிற்கு மேல்) காரணமாக அவை SPBM உப வகுதியின் கீழ் மூலதனச் சொத்தாக வகைப் படுத்தப்ப்டிருந்தது. ஒரு கவ்சேர்ஸ் சேதத்தை தொடர்ந்து செயற்பாடுகள் பிரிவு பல பாதுகாப்புகளை அமுலாக்கி இருந்ததுடன் அளவீடுகளை கையாள்கின்றது. உள்ளடக்குபவை, 1. 12 CCTV கமாராக்கள் பொருத்துதல் 2. பெறுமதியுடைய விடயங்களாக பூட்டக்ககூடிய களஞ்சிய கொள்கலன்கள் 3. பாதுகாப்பு கையாளலிற்காக விசேட் இரும்பு தகடுகள் 4. பூட்டிய கேற் மற்றும் நுழைவுக் கட்டுப்பாட்டுடன் கூடிய பாதுகாப்புடைய திறந்த களஞ்சியப் பகுதி 5. பாதுகாப்பு கோபுரம் நிர்மாணித்தல் 6. இடமாற்றப்பட்ட ஊழியர் ஓய்வறைகளின் மீளமைப்பு 7. கொலன்னாவ ரேமினலில் உயர்ந்த பெறுமதியுடைய உப பாகங்களின் மத்திய மயப்படுத்தப்பட்ட களஞ்சியம். மற்றும் 8. சேத நிகழ்வுகளிற்காக செயற் பாட்டிலுள்ள விசாரணைகள்	சேதங்களின் தன்மை, பெறுமதி மற்றும் பொறுப்புடைய இனங்காண்பதற்கு முறையான விசாரணைகள் மேறகொள்ளப்பட வேண்டியதுடன் இந்த விடயம் தொடர்பில் தீர்மானத்தை பெறுவதற்கு அறிக்கையை பயணிப்பாளர் சபைக்கு முன்வைக்கப்பட வேண்டும்.

	செய்வதற்கோ அல்லது அவறிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.		
(உ)	உள்ளக புலணாய்வு அறிக்கை பிரகாரம் விநியோக நடைமுறையில் மோசடி கண்டுபிடிக்கப்பட்டது. விற்பனை மற்றும் விநியோக நடைமுறையில் தடயவியல் கணக்காய்வு நடாத்தப்பட வேண்டுமென பணிப்பாளர் சபை தீர்மானித்தது. இந்த நோக்கத்திற்காக கம்பனியானது வரிகள் உள்ளடங்கலாக ரூபா 8,600,000 ஆன ஆலேசனைக் கட்டணத்திற்காக கணக்கீட்டு நிறுவனம் தெரிவு செய்யப்பட்டிருந்தது. ஆலோசனை உடன்படிக்கை பிரகாரம் 2023 திசெம்பர் 31 அளவில் வேலைகள் பூர்த்தியாக்கப்பட வேண்டும் எவ்வாறாயினும், வரைவு இடைக்கால அறிக்கை 2024 மே 06 இல் ஆலோசனை நிறுவனத்தால் வழங்கப் பட்டிருந்ததுடன் 2025 மே 05 கணக்காய்வு திகதியில் உள்ளவாறு இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. கம்பனியானது வேலைகளின் உடன்பட்ட வேலை எல்லைகளிற்கு முரணாக இந்த பணிக்கான உடன்பட்ட ஒப்பந்த தொகையிலிருந்து சபையின் அனுமதி அடிப்படையில் 2024 யூலை 29 இல் ரூபா 5,836,691 முற்பண தொகையாக செலுத்தப்பட்டது. மேலும் கம்பனியானது செய்யப்பட்ட பரிந்துரைகளின் தகுதியை மதிப்பாய்வு மூலம் இடைக்கால அறிக்கையில் கொண்டிருந்த பரிந்துரைகள் அமுலாக்குவதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ஏதாவது பரிந்துரைகள் அல்லது உரிய பயனாளர் செயற்பாடுகளால் வழங்கப்பட்ட அனுமதி இல்லாமல் தடயவியல் கணக்காய்விற்கு முற்பண கொடுப்பனவு விடுவித்தல் CPSTL பணிப்பாளர் சபை தீர்மானித்தது. இடைக்கால தடயவியல் கணக்காய்வு அறிக்கை தேவையான சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்கு குற்றப் புலணாய்வு திணைக்களத்திற்கு வழங்கப்பட்டது. கம்பனியானது பரிந்துரைகளை மதிப்பாய்வு செய்வதற்கும் கண்டு பிடிப்புக்களிற்கு எதிராக தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கும் எதிர்காலத்தில் கொடுப்பனவுகளை விடுவிப்பதற்கும் இறுதி தடயவியல் கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு வேண்டியிருந்தது.	இறுதி அறிக்கை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பின்னர் இறுதி அறிக்கையின் பரிந்துரைகளிற்குமைய விடயத்தை தீர்ப்பதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.